கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினரிடம் தகவல் இருந்து எனக்கு எழுதியனுப்பினுல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : பாதுகாப்புக் கைதியாகச் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் பஞ்சாயத்துத் தலேவர்களாகத் தேர்ந் தெடுக்கப் பட்டிருக்கிருர்கள். அவர்கள் சிறையில் இருப்பதால், தொடர்ந்து அந்தப் பஞ்சாயத்து வேலேகளேச் செய்ய முடியாத நிலேமை இருக்கிறது. அதற்கென்று மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தற்காலிகத் தலேவர் நியமனம் செய்யக்கூடிய கேள்விக்கு இடம் இல்லே.

திரு. டி. கார்ச்சா கவுடர் : வயதில் பெரியவர்கள் இருக்க வயதில் குறைந்தவர்கள் சில இடங்களில் தற்காலிகத் தலேவர்களாகப் போடப்பட்டிருக்கிருர்கள். அம்மாதிரி கேஸ்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றனவா ? அப்படியென்ருல் சம்பந்தப் பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஸ்பெஸிஃபிக் இன்ஸ்டென்ஸ் இருந்து எழுதி அனுப்பினுல் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

பஞ்சாயத்துத் தேர்தர்கள்

* 59 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் சமீபத்தில் எத்தனே கிராம நகர பஞ்சா யத்துக்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன ?

(இ) தேதி அறிவித்த பின் நிறுத்தி வைக்கப்பட்ட பஞ்சா யத்துக்கள் எத்தனே ?

(உ) போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சா யத்துக்கள் எத்தனே ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) அன்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களில் சுமார் 423 நகரப் பஞ்சாயத்துக் களுக்கும், சுமார் 12,428 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல்கள் நர்ந்தன.

(இ) தேர்தல்கள் நிறுத்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கையும், அவற்றிற்கான காரணங்களும் வருமாறு :—

தேர்தல் நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள்.	பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை.
உயர்நீதி மன்றத்தால் தடை ஆணே பிறப்பிக்கப் பட்டதால்	112
நியமனபத்திரங்கள் தாக்கல் செய்யப்படாத தால்	197
நியமனங்கள் திரும்பப் பெறப்பட்டதால்	62
நியமனங்கள் மறுக்கப்பட்டதால்	28
நிர்வாக இடையூறுகளால்	4
நகராட்சிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டதால்	9
மற்ற காரணங்களால்	12

2nd August 1965]

எண்பத்தேழு கிராம பஞ்சாயத்துக்களிலும், 11 நகர பஞ்சாயத்துக்களிலுமே பஞ்சாயத்து முழுவதற்குமான தேர்தல்கள் நிறுத்தப்பட்டன. மற்ற பஞ்சாயத்துக்களில் குறிப்பிட்ட சில வார்டுகளில் மட்டுமே நிறுத்தப்பட்டன.

(உ) 15,694 பஞ்சாயத்து வார்டுகளில் போட்டி இல்லை. 45,780 அங்கத்தினர்கள் எதிர்ப்பில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தார் டைலிமிடேஷன் சரியான முறையில் செய்யப்படவில்லை என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி தேர்தல் நடக்கக் கூடாது என்று தடை உத்தரவு போட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, தொகுதிகளைச் சரியான முறையில் டைலிமிடேட் செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அவர்கள் கொடுத்துள்ள தீர்ப்புகள் வழக்குகளுக்குத் தகுந்தாற்போல இருக்கும் என்பதைக் கனம் அங்கத்தினர்களே அறிவார்கள். அவர்களது தீர்ப்புகளில் பிரிவினை சம்பந்தமாகவும் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கலாம். முறைப்படி டைலிமிடேஷன் செய்து பரிசீலிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா: போட்டியே இல்லாமல் தேர்தல் நடந்துள்ள பஞ்சாயத்துக்களில் அந்த அந்தப் பஞ்சாயத்து மக்களின் ஒற்றுமைதான் வெளிப்படுகிறது. மற்ற எல்லா ராஜ்யங்களிலும் கொடுக்கப்படுவதுபோல நம் ராஜ்யத்திலும் அரசாங்கம் இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு பிரத்யேக மானியம் அளிக்க முன்வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எல்லா ராஜ்யங்களிலும் அப்படி இல்லை. ஆந்திராவில் மட்டும் தான் இன்சென்டிவ்வாக கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும் 50 சதவிகிதத்துக்கு மேல் போட்டியில்லாமல் தேர்தல் நடந்த பஞ்சாயத்துக்கள் இல்லை. அம்மாதிரி இன்சென்டிவ் கொடுக்காமலேயே நம் ராஜ்யத்தில் 38 முதல் 40 சதவிகிதம் வந்திருக்கிறது. இன்னும் இந்த நல்ல பண்பை மக்களிடத்தில் வளர்ப்பதற்கு கனம் அங்கத்தினர்கள் நல்ல பிரசாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். தண்டாயுதபாணி : உயர்நீதி மன்றத் தீர்ப்பால் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில் பலவற்றில் மீண்டும் தேர்தல் நடந்துவிட்டது. இனி தேர்தல் நடக்க வேண்டிய பஞ்சாயத்துகள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எனக்கு ஞாபகம் சுமார் 112 பஞ்சாயத்துகளில் தேர்தல் நிறுத்தப்பட்டது. அவற்றில் 100 பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் முடிந்துவிட்டது. இன்னும் 12 பஞ்சாயத்துக்களில் தான் தேர்தல் நடக்க வேண்டும். ஸ்டே வெக்கேட் ஆனவுடன் அதற்கும் நடத்தப்பட்டுவிடும்.

திரு. கரு. சீமைச்சாமி: பஞ்சாயத்துகளே அமைக்கப்படாத கிராமங்கள் இருக்கின்றனவா? ஆம் எனில் காரணங்கள் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தேர்தல் நிறுத்திவைக்கப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அங்குள்ள அதிகாரிகளே மீண்டும் தேர்தல் நடத்துவதற்குத் தேதியை நிர்ணயித்துத் தேர்தலை நடத்தலாமா? அல்லது அரசாங்கம் தேதி நிர்ணயிக்கிற வரையில் காத்திருந்து அப்புறம் தான் தேர்தல் நடத்த வேண்டுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஜில்லா அளவில் கலெக்டரே தேதியை நிர்ணயித்துத் தேர்தலை நடத்தலாம். அதில் டிலே ஆகிறது என்கிற விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. செ. மாதவன் : இந்தத் தேர்தலுக்கு முதலில் ப்ரப்போசர், செகண்டர் இரண்டு பேரும் வேண்டும் என்று சொல்லப் பட்டது. தேர்தல் நடக்கிறபோது ப்ரப்போசர் மட்டும் இருந்தால் போதும் என்று விதி செய்யப்பட்டது. இந்தமாதிரி விதி செய்த காரணத்தினால் தேர்தலை நடத்தக் கூடாது என்பதாக தீர்ப்பு வழங்கப்பட்டது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இந்த மாபெரும் தவறு எப்படி நடந்தது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அரசாங்கம் அம்மாதிரி ரூல்ஸ் போட்டதாகத் தெரியவில்லை. எழுதி அனுப்பினால் பரிசீலிக்கி றேன்.

திரு. எம். எஸ். மணி: போட்டி இல்லாமல் தேர்தலை நடத்துகிற பஞ்சாயத்துகளுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்று பத்திரிகை யில் செய்தி வந்திருந்ததே, அதன்படி வெகுமதி அளிக்கப் பட்டதா ? அல்லது அந்தச் செய்தியே உண்மைக்குப் புறம்பானதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்தச் செய்தி உண்மை அல்ல. ஆந்திராவில் கொடுக்கப்போவதாக அறிவித்தார்கள். அதுமாதிரி இங்கும் கொடுக்கப்படலாம் என்ற ஊகத்தில் பத்திரிகை நிருபர் களாக ஊகித்துப் போட்ட தவறான செய்தியாகும் என்று நினைக் கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் மெம்பர்களைக் கடத்திக் கொண்டு போவது இருக்க, ப்ரிசைடிங் ஆபிசர்களையே கடத்திக்கொண்டு போனதான சம்பவம் எங்காவது நடந்திருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் இல்லை. தனி யாகக் கேள்வி கேட்டால் விசாரித்துப் பார்க்கிறேன்.

நகரமன்றத் தேர்தல்களின் போது ஆள்மாறாட்டங்கள்

* **60. கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி**: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1964 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற நகர மன்றத் தேர்தலில் வாக்குப்பதிவு செய்ய ஆள்மாறாட்டம் செய்தவர்கள் எத்தனை பேர்?

(இ) எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது?